**ஒபெக் நிதியத்தின் கொழும்பு தேசிய நெடுஞ்சலைகளின் புனரமைப்பு மற்றும் முன்னேற்ற செயற்திட்டம் - 2021**

---

ஒபெக் நிதியத்தின் கொழும்பு தேசிய நெடுஞ்சலைகளின் புனரமைப்பு மற்றும் முன்னேற்ற செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு கருத்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. கொழும்பைச் சூழவுள்ள 13 பிரதான தேசிய வீதிகளின் 65.45 கிலோமீற்றர்களை தரமுயர்த்துதல் மற்றும் நாரஹம்பிட்டிய – நுகெகொட வீதியின் மீள் நிர்மானம் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோளகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 11,212.37 மில்லியனுக்குச் சமமான 86.25 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். அதில் ரூபா 6,499.57 மில்லியனுக்குச் சமமான 50 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சர்வதேச அபிவிருத்திக்கன ஒபெக் நிதியினால் வழங்க உடன்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 திசெம்பர் 11 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2017 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2022 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற

அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | ஏற்கனவே மீளப்பெறப்பட்ட தொகை வெளிநாட்டு உதவியின் கீழ் பதிவு செய்திராமல் நிதிக்கூற்றுக்களில் வெளிநாட்டு மீளப்பெறத்தக்கவையாக காட்டப்பட்டிருந்தது. | 525 | செயற்திட்டத்தின் ஆரம்பகட்டத்திலிருந்து கடனிலிருந்தான மீளப்பெறல்கள் அரச கணக்குகள் திணைக்களத்தின் அறிக்கையின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது. ரூபா 525 மில்லியன் அரச கணக்குகள் திணைக்களத்தின் அறிக்கையில் அது இல்லாதிருந்ததிலிருந்து மீளப்பெறத்தக்க வெளிநாட்டு உதவிகணக்கில் பதிவுசெய்யப்பட்டிருந்தது. | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சரியான கடன் மீதியை வெளிப்படுத்த செயற்திட்டத்தின் உண்மையான மீளப்பெறல்களை பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | வல்கம – தியகம வின் காணி உரிமையாளர்களிற்கு சட்டரீதியான இழப்பீடுகளின் கொடுப்பனவுகளில் தாமதத்திற்காக செலுத்தப்படவேண்டிய வட்டி ரூபா 239 மில்லியன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 88.00 | கருத்தில் கொள்ளப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டில் வல்கம – தியகம இற்கான வட்டி ஏற்பாடுகளை கணக்கிட நடவடிக்கை எடுக்கப்படும். | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தவேண்டிய வட்டிக்கணக்கினை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | ஒப்பந்ததாரரிற்கு செலுத்தவேண்டிய கணக்கு 2021 திசெம்பர் மாதத்திற்காக ஒருகொடவத்த அம்பத்தல கட்டம் - I உடன் தொடர்புபட்ட இடைக்கால கொடுப்பனவு பட்டியல் இல.24 இற்காக செய்யப்பட்ட பிழையான ஏற்பாடுகள் காரணமாக குறைவாக காட்டப்பட்டிருந்தது. | 10.56 | ஒருகொடவத்த – அம்பத்தல வீதியிற்காக (கட்டம் 1) 2021 திசெம்பரிற்கான கூறப்பட்ட இடைக்கால கொடுப்பனவு பத்திரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டதன் பின்னர் பிஎம்யு விற்கு கிடைக்கப்பெற்றிருந்தது. | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சரியான பொறுப்பினை பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து கிடைக்கப்பெற்ற நீண்டகாலகடன் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. இருப்பினும் உரிய தொகை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 1,478 | - | செயற்திட்ட நிதிக்கூற்றுக்கள் நிறுவன நிதிக்கூற்றுக்களுடன் உடன்பட வேண்டும். |

### 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக மற்றும் நிதி செயலாற்றல்

| விடயங்கள் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயங்கள் | தாமதங்களிற்கான காரணம் |
|---|---|---|---|---|
| | எதிர் பார்க்கப்பட்ட பௌதிக செயலாற்றல் | அடையப்பட்ட செயலாற்றல் | | |
| | சதவீதம் | சதவீதம் | | |
| கொட்டாவ – தலகல வீதி | 100% | 97.5% | செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2013 திசெம்பர் 11 இல் ஆரம்பிக்கப்பட்டு 2017 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்ய பட்டியலிடப்பட்டிருந்தும் 06 தேசிய வீதிகளின் 24.07 கி.மீகளின் புனரமைப்பு வேலைகள் மற்றும் பால மேம்படுத்தல்கள் மாத்திரமே 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் செயலாற்றல் காணி சுவீகரிப்பில் தாமதம் மற்றும் பொதுப்பயன்பாடுகளை அகற்றுவதில் தாமதம் போன்றன காரணமாக பிரதானமாக தாமதமடைந்திருந்தது. |
| ஒருகொடவத்த – அம்பத்தல வீதி (கட்டம் I) | 100% | 72% | | |
| ஒருகொடவத்த – அம்பத்தல வீதி (கட்டம் II) | 66% | 64% | | |

**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** உடன்பட்டனர். எவ்வித காணி சுவீகரிப்புக்களும் கூறப்பட்ட ஒப்பந்தங்களில் சம்மந்தப்படாததிலிருந்து தேசிய வீதிகளின் 24.07 கி.மீ மற்றும் நாரஹம்பிட்ட – நுகெகொட வீதியின் பால இல.2/1 இன் மேம்படுத்தல் என்பன பட்டியலிடப்பட்ட படி பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

**கணக்காய்வாளர் பரிந்துரைகள்** இலக்கிடப்பட்ட திகதிகளில் வேலைகளை பூர்த்திசெய்ய நிர்மான நடவடிக்கைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | ரூபா 1,430 மில்லியன் மற்றும் ரூபா 2,801 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகள் முறையே வெளிநாட்டுக்கடன் மற்றும் ஜீஓஎஸ்எல் செலவினங்கள் என்பனவற்றின் பயன்படுத்தலிற்காக 2021 இல் பொதுத்திறைசேறியினால் வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும் 37 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 525 மில்லியன் தொகையான வெளிநாட்டு கடன் ஒதுக்கீடு மற்றும் 17 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 469 மில்லியன் தொகையான ஜீஓஎஸ்எல் ஒதுக்கீடுகள் என்பன செயற்திட்டத்தின் வேலைகளின் மந்தகதியான செயலாற்றல் காரணமாக செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்படாமல் இருந்தது. | உடன்பட்டனர். வெளிநாட்டு கடன் ஒதுக்கீட்டின் குறை பயன்படுத்தல் காணி சுவீகரிப்பு மற்றும் பொதுப்பயன்பாடு போன்றவற்றில் தாமதத்தின் காரணத்தினாலாகும். இருப்பினும் ஒப்பந்ததாரரின் மந்தகதியான செயலாற்றல் கூட செயற்திட்டத்தினை தாமதிப்பதற்கு பங்களித்திருந்தது. ஜிஓஎஸ்எல் ஒதுக்கீடு கட்டுநிதிகள் கிடைக்கப்பெறாததன் காரணமாக குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் செயற்திட்டத்தின் நிதிபயன்பாட்டின் வினைத்திறனை அதிகரிக்க முறையாக திட்டமிடப்படல் வேண்டும். |
| (ஆ) | கொட்டாவ – தலகல வீதியின் உண்மையான ஒப்பந்தப்பெறுமதி ரூபா 1,253 மில்லியன் நீடிக்கப்பட்ட செயற்திட்ட காலப்பகுதி மற்றும் அளவுகளின் மாறல்கள் காரணமாக 30 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 377 மில்லியனினால் ரூபா 1,630 மில்லியன் வரை பின்னர் அதிகரிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் 2006 அரச பெறுகை வழிகாட்டிகளின் பிரிவு 8.13.4 இன் பிரகாரம் தொழிநுட்ப மதிப்பீட்டு குழு மற்றும் பொறுகை குழு என்பனவற்றின் தேவையான அனுமதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்பட்டனர். கொட்டாவ – தலகல வீதி செயற்திட்டத்தின் ஒப்பந்தபெறுமதி பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் மாற்றியமைக்கப்பட்டிருந்தது டன் பெறுகை நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கைகள் இவ் அலுவலகத்தில் காணப்படுகின்றன. | 2006 அரச பெறுகை வழிகாட்டிகளின் பிரிவு 8.13.4 இன் பிரகாரம் உரிய அனுமதி எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | ஒருகொடவத்த – அம்பத்தல வீதி கட்டம் -1 இன் புனரமைப்பு வேலைகளிற்கான ஒப்பந்தம் ரூபா 1,528 மில்லியன் கிரயத்தில் 2017 ஜுலை 01 இல் ஆரம்பிக்கப்பட்டு 2019 ஜுன் 30 இல் பூர்த்திசெய்ய திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும் ஒப்பந்த காலப்பகுதி ஒப்பந்ததாரரிற்கு 639 நாட்கள் காலநீடிப்பு வழங்குவதனூடாக 2022 செப்தம்பர் 30 வரை ஐந்து தடவைகள் செயற்திட்டத்தினால் நீடிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்ததாரரின் செயலாற்றல் மிகவும் மந்தகதியாகவும் | பொறியியலாளர் இவ் ஈஓடி இனை மதிப்பிட்டிருந்ததுடன் ஒப்பந்தத்திற்கு 175 நாட்கள் நீடிப்பினை வழங்கியிருந்தார். பொறியியலாளர் ஒரே நேரத்தில் ஏற்பட்ட வேலை வழங்குனர் ஆபத்து விடயங்கள் மற்றும் 175 நாட்கள் குற்றதாமத விடயங்கள் போன்றன காரணமாக செயங்திட்டமானது 175 நாட்கள் | ஒப்பந்ததாரர் செயலாற்றலினை நேர அடிப்படையில் மதிப்பிடவேண்டியதுடன் தேவையான மாற்றங்கள் அமுல்படுத்தப்படல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| மெதுவாகவும் இருந்தும் ஒப்பந்த நிபந்தனையின் பிரகாரம் ஒப்பந்ததாரரிடமிருந்து தாமத பாதிப்புக்களை கழிக்க செயற்திட்டத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் வழங்கப்பட்ட 175 நாட்கள் காலநீடிப்புடன் தொடர்புபட்ட ரூபா 17.41 மில்லியன் தொகையான ஒப்பந்ததாரர் பெறுவனவுகள் ஒப்பந்ததாரர் செயலாற்றலை கவனத்தில் கொள்ளாது செயற்திட்டத்தினால் அனுமதிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.. | தாமதமடைந்திருந்ததென அரவது மதிப்பீட்டு அறிக்கையில் விபரமாக காட்டியுள்ளார். | |

## 3.3 காணி சவிகரிப்புடன் தொடர்புபட்ட விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|
| கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் 907 அரச காணித்துண்டுகள் உள்ளடங்களாக 5,456 காணித்துண்டுகளை கொள்வனவு செய்ய பட்டியலிடப்பட்டிருந்தது. அதில் ரூபா 1,312 மில்லியன் வட்டி உள்ளடங்களாக 10,998 மில்லியன் தொகையான இழப்பீடு இழப்பீடுகளை கொடுத்து தீர்ப்பதில் தாமதம் காரணமாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளிற்காக செயற்திட்டத்தினால் ஏற்படுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் 05 காணித்துண்டுகள் மாத்திரமே 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. | காணி சுவீகரிப்பு சட்டத்தின் உபபிரிவு 44 இன் பிரகாரம் உடன்பட்டனர், காணிகள் இழப்பீடுகளின் தாமத கொடுப்பனவுகள் மீதான வட்டி கொடுப்பனவு செலுத்தப்பட்ட பின்னர் காணி பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் மிக அண்மையில் வட்டிக்கொடுப்பனவுகளிற்கு முன்னர் காணிகளை பதிவு செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்தது. | காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தவும் காணிகளை காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |